# தமிழக அமைச்சரவை இன்று விரிவாக்கம்

## காங்கிரஸ், தவெக எம்எல்ஏக்கள் அமைச்சர்களாகப் பதவியேற்கின்றனர்

புது தில்லி/ சென்னை, மே 20: முதல்வர் விஜய் தலைமையிலான தமிழக அமைச்சரவை வியாழக்கிழமை விரிவாக்கம் செய்யப்படுகிறது. ஆளுநர் மாளிகையில் காலை 10 மணிக்கு புதிய அமைச்சர்கள் பதவியேற்பு விழா நடைபெறவுள்ளது. தவெக எம்எல்ஏக்கள், கூட்டணி கட்சியான காங்கிரஸ் எம்எல்ஏக்கள் ராஜேஷ்குமார், பெ. விஸ்வநாதன் ஆகியோருக்கு ஆளுநர் ஆர்.வி. ஆர்லேகர் அமைச்சர்களாக பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார். தவெக அரசு அமைந்த 10 நாள்களுக்கு பிறகு நடைபெறும் முதல் அமைச்சரவை விரிவாக்கம் இதுவாகும்.

நடந்து முடிந்த தமிழக பேரவைத் தேர்தலில் தவெக 108 இடங்களிலும், திமுக 59 இடங்களிலும், அதிமுக 47 இடங்களிலும் வெற்றி பெற்றதால் யாருக்கும் பெரும்பான்மை பலம் கிடைக்காமல் தொங்கு சட்டப்பேரவை உருவானது.

இதையடுத்து, 5 இடங்களில் வெற்றி பெற்ற திமுக கூட்டணி கட்சியான காங்கிரஸ் தேர்தல் முடிவு வெளியான மறுதினமே தவெக கூட்டணிக்கு நிபந்தனையுடன் ஆதரவு அளித்தது.

இதையடுத்து, தலா 2 இடங்களில் வெற்றி பெற்ற இடதுசாரி கட்சிகள் வெளியில் இருந்து தவெகவுக்கு ஆதரவு அளித்தன. நீண்ட இழுபறிக்கு பிறகு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (ஐயுஎம்எல்), விடுதலைச் சிறுத்தைகள் கட்சி (விசிக) ஆகியவையும் ஆதரவு அளித்ததால் கடந்த மே 10-ஆம் தேதி முதல்வராக விஜய்யும், அவரது அமைச்சரவை சகாக்கள் 9 பேரும் பதவியேற்றனர்.



### தவெக சார்பில் 21 பேர் பதவியேற்பு ?

தவெக சார்பில் 21 எம்எல்ஏக்கள் வியாழக்கிழமை அமைச்சர்களாகப் பதவியேற்பார்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்போது, முதல்வர் விஜய்யுடன் சேர்த்து 10 பேர் அமைச்சர்களாக உள்ளனர். வியாழக்கிழமை பதவியேற்பு விழாவில் மேலும் 21 தவெக எம்எல்ஏக்கள் அமைச்சர்களாக பதவியேற்க வாய்ப்புள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. காங்கிரஸ் எம்எல்ஏக்கள் இருவர் பதவியேற்க உள்ளது உறுதியாகி உள்ளதால், மொத்த அமைச்சர்களின் எண்ணிக்கை 33-ஆக உயரும்.

ஐயுஎம்எல் சார்பில் ஒருவர் அமைச்சராவதை அக்கட்சி உறுதி செய்துள்ளது. அவர் யார் என்பதை வியாழக்கிழமை (மே 21) அக்கட்சி அறிவிக்கவுள்ளது. அமைச்சரவையில் விசிகவும் இணைந்தால், அந்த இருவருக்கும் தனியாக அமைச்சரவை விரிவாக்கம் நடைபெறும்.

### 59 ஆண்டுகளுக்குப் பிறகு காங்கிரஸ் அமைச்சர்கள்

சட்டப்பேரவை காங்கிரஸ் குழுத் தலைவரும் கிள்ளியூர் தொகுதி எம்எல்ஏவுமான ராஜேஷ் குமார், மேலூர் தொகுதி எம்எல்ஏ பெ. விஸ்வநாதன் ஆகியோர் அமைச்சர்களாக பதவியேற்பார்கள் என்று அக்கட்சியின் தேசிய பொதுச்செயலர் கே.சி. வேணுகோபால் அறிவித்தார்.



ராஜேஷ்குமார், பெ.விஸ்வநாதன்

இது குறித்து எக்ஸ் தள பக்கத்தில் அவர் புதன்கிழமை கூறியிருப்பதாவது:

காங்கிரஸ் தேசியத் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே காங்கிரஸ் எம்எல்ஏக்களான வழக்குரைஞர் ராஜேஷ் குமார், பெ. விஸ்வநாதன் ஆகியோரை தமிழக அமைச்சரவையில் இணைய ஒப்புதல் தெரிவித்துள்ளார். இவர்கள் இருவரும் வியாழக்கிழமை (மே 21) அமைச்சர்களாகப் பதவியேற்கவுள்ளனர்.

59 ஆண்டுகள் எனும் நீண்ட இடைவெளிக்குப் பிறகு, தமிழக அமைச்சரவையில் காங்கிரஸ் கட்சி மீண்டும் இடம்பெறுவது எங்களுக்கு ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தருணமாகும். தமிழக மக்களின் நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புகளையும் அவர்கள் நிச்சயம் நிறைவேற்றுவார்கள் என்றும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி வகுத்துத் தந்துள்ள, மக்கள் நலன் சார்ந்த மற்றும் மக்கள் சார்பான துணிச்சலான நல்லாட்சிக் கொள்கைகளைச் செயல்படுத்த இருவரும் அயராது பாடுபடுவார்கள் என்றும் நாங்கள் உறுதியாக நம்புகிறோம் என்று கே.சி. வேணுகோபால் கூறியுள்ளார்.

இதையடுத்து, கடந்த மே 13-ஆம் தேதி சட்டப்பேரவையில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் 144 எம்எல்ஏக்களின் ஆதரவுடன் தவெக அரசு பெரும்பான்மையை நிரூபித்து ஆட்சியை தக்கவைத்தது.

இதில், சி.வி. சண்முகம், எஸ்.பி. வேலுமணி தலைமையிலான 25 அதிமுக அதிருப்தி எம்எல்ஏக்கள் தவெகவுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இந்நிலையில், பதவியேற்று ஒருவாரத்துக்கு பிறகு 9 தவெக அமைச்சர்களுக்கு கடந்த சனிக்கிழமை (மே 16) துறைகள் ஒதுக்கப்பட்டன.

எனினும், வேளாண், உயர் கல்வி, தகவல் தொழில்நுட்பம், சிறுபான்மையினர் நலன், இந்து சமய அறநிலையத் துறை, மதுவிலக்கு ஆயத் தீர்வை உள்பட 20-க்கும் மேற்பட்ட துறைகளுக்கு அமைச்சர்கள் நியமிக்கப்படாமல் காலியாக இருந்தன.

### தமிழகத்தில் முதல்முறையாக கூட்டணி அரசு

தமிழக அரசியல் வரலாற்றில் முதல்முறையாக கூட்டணி அரசு அமைந்துள்ளது. அதாவது முதல்முறையாக அரசுக்கு ஆதரவு அளிக்கும் கட்சிக்கு அமைச்சரவையில் இடம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்பு தமிழகத்தில் தனியொரு கட்சிக்கு பெரும்பான்மை கிடைக்காமல் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைந்துள்ளது. எனினும், கூட்டணிக் கட்சிகளுக்கு அமைச்சரவையில் இடம் அளிக்கப்பட்டது இல்லை. இப்போதுதான் முதல்முறையாக அரசுக்கு ஆதரவு அளிக்கும் கட்சி (காங்கிரஸ்) அமைச்சரவையில் இடம் பெறவுள்ளது. மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் 35-ஆவது நினைவு நாளில் (மே 21) இது நிகழ்வது குறிப்பிடத்தக்கது.

### எத்தனை பேர் அமைச்சர்களாக இருக்கலாம்?



இந்திய அரசமைப்புச் சட்டம் 164 (1ஏ) பிரிவின்படி, சட்டப்பேரவையின் மொத்த எண்ணிக்கையில் 15 சதவீதம் பேர் அமைச்சர்களாக இருக்கலாம். அந்த வகையில், 234 உறுப்பினர்களைக் கொண்ட தமிழக சட்டப்பேரவையில் 35 பேர் அமைச்சர்களாக இருக்க வரம்பு உள்ளது.

## 'மதுக் கடையை மூட அரசுக்கு அதிகாரம்'

மதுரை, மே 20: எந்தவொரு மதுக் கடையையும் மூடுவதற்கு அரசுக்கு அதிகாரம் உள்ளது என சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு புதன்கிழமை தெரிவித்தது.

மதுக் கூட நிர்வாகிகள், மதுக் கூட சிற்றுண்டியக குத்தகைதாரர்கள், விற்பனை முகவர்கள் சிலர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு:

தமிழகத்தில் 717 மதுக் கடைகளை மூடுவதற்கு தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. நாங்கள் இந்தக் கடைகளில் சிற்றுண்டிகளை விற்பனை செய்யவும், காலி மதுப் புட்டிகளைப் பெறவும் குத்தகைத் தொகை செலுத்தியுள்ளோம்.

இந்த நிலையில், குத்தகை காலம் முடியும் முன்பாகவே மதுக் கடைகள் மூடப்படுவதால் எங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும்.

எனவே, குத்தகை காலம் முடியும் வரை மதுக் கடைகளை மூடக் கூடாது என உத்தரவிட வேண்டும் அல்லது குத்தகையில் எஞ்சியுள்ள நாள்களுக்கான தொகையை எங்களுக்குத் திரும்ப வழங்க உத்தரவிட வேண்டும் என அவர்கள் கோரினர்.

இந்த மனுவை புதன்கிழமை உயர்நீதிமன்ற நீதிபதி பரத சக்கரவர்த்தி பிறப்பித்த உத்தரவு:

717 மதுக் கடைகளை மூடுவதற்கு தமிழக அரசு பிறப்பித்த உத்தரவு வரவேற்கத்தக்கது. பிரச்னை இல்லை என்றாலும் மக்கள் நலன் கருதி மதுக் கடைகளை மூடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கலாம் என உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே உத்தரவிட்டது. எனவே, எந்தவொரு மதுக் கடையையும் மூடுவதற்கு அரசுக்கு அதிகாரம் உள்ளது.

மதுக் கடை, மதுக் கூட கட்டட உரிமையாளர்கள், மதுக் கூட குத்தகைதாரர்களுக்கு எஞ்சிய நாள்களுக்கான வைப்புத் தொகையைத் திரும்ப வழங்குவது குறித்து அரசு பரிசீலித்து 2 வாரங்களில் முடிவெடுக்க வேண்டும். இந்த வழக்கு முடித்துவைக்கப்படுகிறது என்றார் நீதிபதி.

# பத்தாம் வகுப்பு: 94.31% தேர்ச்சி

## புதுக்கோட்டை முதலிடம்



பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகளை சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகக் கூட்டரங்கில் புதன்கிழமை வெளியிட்ட பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் மற்றும் துறை அதிகாரிகள்.

**சென்னை, மே 20:** தமிழகத்தில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் 94.31 சதவீத மாணவ,மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். கடந்த ஆண்டைக் காட்டிலும் 0.51 சதவீதம் தேர்ச்சி அதிகரித்துள்ளது. மாவட்ட வாரியான தேர்ச்சியில் புதுக்கோட்டை 97.57 சதவீதத்துடன் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

தமிழகத்தில் மாநில பாடத்திட்டத்தில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு மார்ச் 11 முதல் ஏப்.6 வரை நடைபெற்றது. இதைத் தொடர்ந்து தேர்வு முடிவுகளை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகக் கூட்டரங்கில் புதன்கிழமை வெளியிட்டார். அதன் விவரம்:

பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வை நிகழாண்டு 4 லட்சத்து 35 ஆயிரத்து 247 மாணவிகள், 4 லட்சத்து 35,396 மாணவர்கள் என மொத்தம் 8 லட்சத்து 70 ஆயிரத்து 643 பேர் எழுதினர். அதில், 8 லட்சத்து 21,105 மாணவிகள் (96.47 சதவீதம்), 4 லட்சத்து ஆயிரத்து 214 மாணவர்கள் (92.15 சதவீதம்) என மொத்தம் 8 லட்சத்து 21 ஆயிரத்து 105 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். மாணவர்களை விட 4.32 சதவீத மாணவிகள் அதிகம் தேர்ச்சி பெற்றுள்ளனர். ஒட்டு மொத்த தேர்ச்சி சதவீதம் 94.31. கடந்த 2025-ஆம் ஆண்டின் தேர்ச்சி 93.80- ஆக இருந்த நிலையில் நிகழாண்டு 0.51 சதவீதம் தேர்ச்சி அதிகரித்துள்ளது.

**1,931 அரசுப் பள்ளிகள் 100% தேர்ச்சி:** பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வை 7,490 மேல்நிலை, 4,977 உயர்நிலைப் பள்ளிகள் என மொத்தம் 12,467 பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் எழுதினர். அதில் 1,931 அரசுப் பள்ளிகள் உள்பட மொத்தம் 5,171 பள்ளிகள் 100 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளன.

முதல் ஐந்து மாவட்டங்கள்: மாவட்ட வாரியான தேர்ச்சி சதவீதத்தில் புதுக்கோட்டை (97.57), சிவகங்கை (97.54), தஞ்சாவூர் (97.41), திருச்சி (97.31), கன்னியாகுமரி (97.30) ஆகிய மாவட்டங்கள் முறையே முதல் ஐந்து இடங்களைப் பெற்றுள்ளன.

அதேபோன்று அரசுப் பள்ளிகளுக்கான தேர்ச்சி சதவீதத்தில் சிவகங்கை (97.42), புதுக்கோட்டை (97.09), தஞ்சாவூர் (96.89), ராமநாதபுரம் (96.78), திருச்சி (96.48) ஆகிய மாவட்டங்கள் முறையே முதல் ஐந்து இடங்களைப் பிடித்துள்ளன. சென்னை மாவட்டம் 92.34 சதவீத தேர்ச்சியுடன் 29-ஆவது இடத்தில் உள்ளது.

**மாற்றுத் திறனாளிகள்- சிறைவாசிகள்:** தேர்வெழுதிய 13,292 மாற்றுத் திறனாளிகளில், 11,416 பேர் (85.89 சதவீதம்) தேர்ச்சி பெற்றுள்ளனர். இதேபோன்று சிறைவாசிகள் 370 பேர் தேர்வெழுதிய நிலையில், 354 பேர் (95.68 சதவீதம்) தேர்ச்சி பெற்றுள்ளனர்.

தனித்தேர்வர்களைப் பொருத்தவரை, நிகழாண்டு 24,353 பேர் தேர்வெழுதினர். அவர்களில், 8,744 பேர் மட்டுமே தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி சதவீதம் 35.91.

**தமிழில் 34 பேர் 100-க்கு 100:** மொழிப் பாடங்களில் தமிழில் 34 மாணவர்களும், ஆங்கிலத்தில் 92 பேரும் 100-க்கு 100 மதிப்பெண் பெற்று சாதனை படைத்துள்ளனர். ஏதேனும் ஒரு பாடத்தில் 100 மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 17,132- ஆக உள்ளது. இதில் அரசுப் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை 2,774.

மாணவர்கள் தங்களுக்கான தேர்வு முடிவுகளை www.tnresults.nic.in, www.dge.tn.gov.in, results.digilocker.gov.in ஆகிய இணையதள முகவரிகளில் தங்கள் பதிவெண், பிறந்ததேதி ஆகியவற்றை உள்ளீடு செய்து அறிந்து கொள்ளலாம்.

பள்ளி மாணவர்களுக்கு அவர்கள் பயின்ற பள்ளிகளில் சமர்ப்பித்த உறுதிமொழிப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கைப்பேசி எண்ணுக்கும், தனித்தேர்வர்களுக்கு இணையவழியில் விண்ணப்பிக்கும்போது வழங்கிய கைப்பேசி எண்ணுக்கும் குறுஞ்செய்தி (எஸ்எம்எஸ்) வழியாக தேர்வு முடிவுகள் அனுப்பப்பட்டுள்ளன.

தேர்வு முடிவுகள் வெளியீடு நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித் துறைச் செயலர் பி.சந்தரமோகன், இயக்குநர் எஸ்.கண்ணப்பன், தேர்வுத்துறை இயக்குநர் க.சசிகலா, தொடக்கக் கல்வி இயக்குநர் பூ.ஆ.நரேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### 100-க்கு 100 எத்தனை பேர்?

| | |
|---|---|
| தமிழ் | 34 |
| ஆங்கிலம் | 92 |
| கணிதம் | 3,194 |
| அறிவியல் | 10,476 |
| சமூக அறிவியல் | 3,336 |

### பள்ளிகள் வகை வாரியான தேர்ச்சி சதவீதம்

| | |
|---|---|
| அரசுப் பள்ளிகள் | 91.86 |
| அரசு உதவி பெறும் பள்ளிகள் | 94.34 |
| தனியார் சுயநிதிப்பள்ளிகள் | 98.14 |
| இரு பாலர் பள்ளிகள் | 94.42 |
| பெண்கள் பள்ளிகள் | 96.42 |
| ஆண்கள் பள்ளிகள் | 88.50 |

| | |
|---|---|
| தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் விநியோகம் | மே 22 |
| விடைத்தாள் நகலுக்கு விண்ணப்பிக்கும் அவகாசம் | மே 22 முதல் மே 27 வரை |
| மறு மதிப்பீடு, மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் நாள்கள் | ஜூன் 17 முதல் ஜூன் 19 வரை |
| துணைத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் அவகாசம் | மே 26 முதல் ஜூன் 9 வரை |
| துணைத் தேர்வு | ஜூலை 8 முதல் ஜூலை 15 வரை |

### மாவட்ட வாரியான தேர்ச்சி (சதவீதத்தில்)

| | |
|---|---|
| புதுக்கோட்டை | 97.57 |
| சிவகங்கை | 97.54 |
| தஞ்சாவூர் | 97.41 |
| திருச்சி | 97.31 |
| கன்னியாகுமரி | 97.30 |
| ராமநாதபுரம் | 97.28 |
| கோவை | 97.09 |
| ஈரோடு | 97.03 |
| தூத்துக்குடி | 96.60 |
| நீலகிரி | 96.32 |
| திருப்பூர் | 96.28 |
| தேனி | 96.15 |
| திண்டுக்கல் | 96.08 |
| விருதுநகர் | 96.02 |
| நாமக்கல் | 96.01 |
| தென்காசி | 95.60 |
| திருநெல்வேலி | 95.48 |
| பெரம்பலூர் | 95.11 |
| மதுரை | 94.91 |
| காஞ்சிபுரம் | 94.61 |
| கடலூர் | 94.22 |
| சேலம் | 94.21 |
| தருமபுரி | 93.94 |
| திருவாரூர் | 93.80 |
| திருப்பத்தூர் | 93.52 |
| கள்ளக்குறிச்சி | 93.43 |
| நாகப்பட்டினம் | 93.36 |
| திருவள்ளூர் | 92.75 |
| சென்னை | 92.34 |
| கரூர் | 92.21 |
| செங்கல்பட்டு | 92.15 |
| வேலூர் | 92.03 |
| மயிலாடுதுறை | 90.53 |
| திருவண்ணாமலை | 90.46 |
| கிருஷ்ணகிரி | 89.43 |
| விழுப்புரம் | 87.77 |
| அரியலூர் | 87.55 |
| ராணிப்பேட்டை | 86.58 |

# ‘ஸ்பெஷல் டிரைவ் ஆபரேஷன்’: சென்னையில் 75 ரௌடிகள் கைது

சென்னை, மே 20: சென்னை மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் தொடர்ச்சியாக நிகழ்ந்த கொலைச் சம்பவங்கள் மற்றும் சமூகவிரோதச் செயல்களுக்கு எதிராக காவல்துறை மேற்கொண்ட 'ஸ்பெஷல் டிரைவ் ஆபரேஷன்' நடவடிக்கை மூலம் ஒரே இரவில் 75 ரௌடிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாம்பரத்தை அடுத்த மணிமங்கலம் பகுதியில் கடந்த மே 17-இல் சீனிவாசன், பரத் ஆகிய கானா பாடல் கலைஞர்கள் ஏழு பேர் கும்பலால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த வழக்கில் இரண்டு சிறுவர்கள் உள்பட ஐந்து பேரை மணிமங்கலம் காவல் துறையினர் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

இதுதொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையில், முன்விரோதம், கஞ்சா விற்பனை உள்ளிட்ட காரணங்களால் இந்த இரட்டைக் கொலை நடைபெற்றது தெரியவந்தது.

இதுபோல, இரு மாதங்களுக்கு முன்பு பல்லாவரம் பகுதியில் முன்விரோதம் காரணமாக இரு இளைஞர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவமும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. அடுத்தடுத்து நிகழ்ந்த இந்த இரட்டை கொலைச் சம்பவங்கள், தலைநகரில் பொதுமக்களிடையே அச்சத்தையும் பதற்றத்தையும் உருவாக்கியுள்ளன.

இதன் எதிரொலியாக, சென்னை மாநகர எல்லைக்குள் ரௌடிகள் மோதல்கள், போதைப் பொருள் விற்பனை, கட்டப் பஞ்சாயத்து உள்ளிட்ட சட்ட விரோத செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் மாநகர காவல் துறை 'ஸ்பெஷல் டிரைவ் ஆபரேஷன்' நடவடிக்கையை சமீபத்தில் தொடங்கியது.

இதன் ஒரு பகுதியாக, செவ்வாய்க்கிழமை இரவு முழுவதும் காவல்துறையினர் சென்னை பகுதிகளில் தீவிர கண்காணிப்பு மற்றும் அதிரடி சோதனைகளை மேற்கொண்டு பல்வேறு பகுதிகளில் ரவுடிகளை கைது செய்தனர்.

இதன்படி, புளியந்தோப்பு காவல் மாவட்டத்தில் 20 பேர், தியாகராய நகரில் 18 பேர், மயிலாப்பூரில் 12 பேர், அடையாறில் 16 பேர், அண்ணா நகரில் 9 பேர் என மொத்தமாக 75 ரௌடிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் சரித்திரப் பதிவேடு குற்றவாளிகள் என்றும், போதைப் பொருள் விற்பனை, கட்டப்பஞ்சாயத்து உள்ளிட்ட சமூக விரோத செயல்களில் ஈடுபட்டு வந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது.

மேலும், கைது செய்யப்பட்ட நபர்களிடம் தனித்தனியாக விசாரணை நடைபெற்று வருவதாகவும், 'ஸ்பெஷல் டிரைவ் ஆபரேஷன் ' நடவடிக்கை தொடர்ந்து தீவிரப்படுத்தப்படும் எனவும் தமிழ்நாடு காவல்துறை தெரிவித்துள்ளது.

# இந்தியா-இத்தாலி உறவுகள் பன்மடங்கு மேம்பாடு

## பிரதமர் மோடி-மெலோனி உறுதி

ரோம், மே 20: இந்தியா, இத்தாலி இடையேயான உறவுகளை பன்மடங்கு மேம்படுத்த பிரதமர் நரேந்திர மோடியும், அந்நாட்டு பிரதமர் ஜார்ஜியா மெலோனியும் புதன்கிழமை உறுதிபூண்டனர்.

இத்தாலியின் ரோம் நகரில் இரு தலைவர்களும் நடத்திய பேச்சுவார்த்தையில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.

ஐக்கிய அரபு அமீரகம், நெதர்லாந்து, ஸ்வீடன், நார்வே, இத்தாலி ஆகிய 5 நாடுகளுக்கு அரசுமுறைப் பயணமாக கடந்த மே 15-ஆம் தேதி பிரதமர் மோடி இந்தியாவில் இருந்து புறப்பட்டார். இந்தப் பயணத்தின் இறுதிக்கட்டமாக இத்தாலிக்கு அவர் செவ்வாய்க்கிழமை வந்தடைந்தார்.

விமான நிலையத்தில் அளிக்கப்பட்ட பிரம்மாண்ட வரவேற்பைத் தொடர்ந்து, பிரதமர் மோடிக்கு அந்நாட்டு பிரதமர் மெலோனி தரப்பில் இரவு விருந்து அளிக்கப்பட்டது. இத்தாலிக்கு வந்துள்ள தனது நண்பரை வரவேற்பதாகவும் அவர் எக்ஸ் வலைதளத்தில் பதிவிட்டார். இருவரும் இத்தாலியின் மிகப் பிரபலமான கொலோசிய அரங்கை பார்வையிட்டனர்.

இதன் தொடர்ச்சியாக புதன்கிழமை பிரதமர் மோடிக்கு ராணுவ அணிவகுப்புடன் மரியாதை அளிக்கப்பட்ட நிலையில், பிரதமர் மெலோனியுடன் அவர் இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். அதில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் குறித்து இருவரும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்து விவரித்தனர்.

அப்போது பிரதமர் மோடி பேசியதாவது: இந்தியா-இத்தாலி இருதரப்பு உறவை மேலும் பன்மடங்கு மேம்படுத்தும் நோக்கிலான விரிவான கொள்கையை வகுத்துள்ளோம்.

'இந்தியா-இத்தாலி கூட்டு செயல் திட்டம் 2025-2029' நடைமுறைக்கு சாத்தியமான மற்றும் வளமான எதிர்காலத்தை கட்டமைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**இந்தியாவில் 400 இத்தாலிய நிறுவனங்கள்:** இரு நாடுகளிடையேயான வர்த்தகம் ரூ.2.24 லட்சம் கோடி (20 பில்லியன் யூரோ) இலக்கை நெருங்கி வருகிறது. இந்தியாவின் வளர்ச்சிக்கு 400-க்கும் மேற்பட்ட இத்தாலிய நிறுவனங்கள் பங்களித்து வருகின்றன.

தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் நமது கூட்டாண்மையின் உந்துசக்தியாக திகழ்கின்றன. செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் கம்ப்யூட்டிங், அணுமின் ஆற்றல் மற்றும் விண்வெளி ஆகிய துறைகளில் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கின்றன.

**இந்தியா-இத்தாலி புத்தாக்க மையம்:** இந்தியா-இத்தாலி புத்தாக்க மையத்தை நிறுவ பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். இதன்மூலம் இரு நாடுகளைச் சேர்ந்த புத்தாக்க மற்றும் ஆராய்ச்சி மையங்கள், வணிக நிறுவனங்களுக்கிடையே நட்புறவை ஏற்படுத்தி வர்த்தகத்தை அதிகரிக்க முடியும்.

**ரோம்-வாரணாசி பிணைப்பு:** உலகின் 'நித்திய நகரம்' என இத்தாலி தலைநகர் ரோம் அழைக்கப்படுகிறது. அதைப்போலவே எனது மக்களவைத் தொகுதியான வாரணாசியும் நீண்ட வரலாற்றுப் பின்புலம் கொண்டது. ரோம்-வாரணாசி என இரு நாகரிகங்கள் சந்திக்கும்போது நடைபெறும் விவாதங்களும் வரலாறைப்போல் மிகவும் ஆழமானதாக இருக்கும். எதிர்காலத்தின் ஒரு சிறிய முன்னோட்டமாகவும் நட்பின் அடையாளமாகவும் பேச்சுவார்த்தைகள் நடைபெறும்.

**பாதுகாப்பு, கடல்சார் துறைகளில் ஒத்துழைப்பு:** இருநாடுகளின் பாதுகாப்பு தொழிற்சாலைகள் மற்றும் ராணுவத்துக்கிடையே ஒத்துழைப்பு மேம்பட்டு வருகிறது. பாதுகாப்புத் தொழிற்சாலை செயல் திட்டம் கூட்டு உற்பத்தி மற்றும் வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளது. இதுவே பரஸ்பர நம்பிக்கைக்கு அடையாளமாகும். கப்பல் துறை, துறைமுக நவீனமயமாக்கல், உள்கட்டமைப்பு மற்றும் நிலைப் பொருளாதாரத்திலும் ஒன்றிணைந்து செயல்பட முடிவெடுத்துள்ளோம். ஆப்பிரிக்க நாடுகளின் வளர்ச்சித் திட்டங்களும் ஒன்றிணைந்தே மேற்கொள்ளப்படவுள்ளது.

**பயங்கரவாதம் மனிதகுலத்துக்கு எதிரானது:** பயங்கரவாதம் மனிதகுலத்துக்கு எதிரானது என்பதே இந்தியா-இத்தாலியின் ஒருங்கிணைந்த நிலைப்பாடு. எனவே பயங்கரவாத செயல்பாடுகளை முழுமையாக ஒடுக்கும் வகையில் பயங்கரவாத நிதியை முடக்குவதற்கான முன்னெடுப்பை இரு நாடுகளும் இணைந்து எடுத்து வருகிறது. இதன்மூலம் பயங்கரவாதத்துக்கு கண்டனம் தெரிவிப்பதையும் தாண்டி முறையான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதன் முக்கியத்துவத்தை உலக நாடுகளுக்கு இந்தியாவும் இத்தாலியும் உணர்த்தியுள்ளது. உக்ரைன், மேற்காசிய விவகாரம் மற்றும் உலகின் பிற மோதல்களுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு.

**மெலோனிக்கு நன்றி:** கடந்த மூன்றரை ஆண்டுகளில் இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனியுடன் பல்வேறு நிகழ்வுகளில் ஆலோசனை நடத்தியுள்ளேன். இது இந்தியா-இத்தாலி இடையேயான நட்புறவு மற்றும் நல்லிணக்கத்தை வெளிக்காட்டுகிறது. இத்தாலியில் எனக்கும் இந்தியப் பிரதிநிதிகளுக்கும் பிரம்மாண்ட வரவேற்பளித்த அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

**அதிபருடன் சந்திப்பு:** இத்தாலி அதிபர் செர்ஜியோ மாட்டரேல்லாவை சந்தித்து பிரதமர் மோடி ஆலோசனை நடத்தினார்.

இதுகுறித்து பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் வலைதளப் பதிவில், 'ரோம் நகரில் அதிபர் செர்ஜியோ மாட்டரேல்லா உடனான சந்திப்பின்போது வர்த்தகம், முதலீடு மற்றும் கலாசார தொடர்பு குறித்து விவாதித்தேன். செயற்கை நுண்ணறிவு, கனிம வளங்கள், விண்வெளி மற்றும் அணுசக்தி உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து ஆலோசித்தேன்' என குறிப்பிட்டார்.



ரோம் நகரில் இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனியைச் சந்தித்த பிரதமர் மோடி.

## மெலோனிக்கு 'மெலோடி' பரிசளித்த பிரதமர்




தனக்கு மெலோடி சாக்லேட்டுகள் பரிசளித்த இந்திய பிரதமர் மோடிக்கு இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனி நன்றி தெரிவித்தார்.

இதுதொடர்பான விடியோவை மெலோனி எக்ஸ் வலைதளத்தில் பகிர்ந்தார். அதில், 'பிரதமர் மோடி எனக்கு மெலோடி சாக்லேட்டுகளை பரிசாக வழங்கியுள்ளார். அவருக்கு நன்றி' என குறிப்பிடப்பட்டது.

விடியோவில் பிரதமர் மோடியும் இடம்பெற்றிருந்தார். அப்போது 'மெலோடி' என சாக்லேட்டுகளையும் மெலோனி-மோடி என்பதை சுருக்கமாகக் குறிக்கும் வகையிலும் மெலோனி விளையாட்டாக கூறினார். இந்த விடியோ சமூக வலைதளங்களில் வைரலானது.